www.tamilarangam.net

## நிகழ்ச்சி நிரல்

ஒவ்வொரு உரையாடலும்
பிற்பகல் 2.00 மணிக்குத் தொடங்கி 6.00 மணிக்கு
முடிவடையும்.

| | |
|---|---|
| 2.00 – 3.15 | விவரணப்படம் திரையிடல் |
| 3.15 – 3.30 | இடைவேளை |
| 3.30 – 4.15 | கட்டுரை சமர்ப்பித்தல் |
| 4.15 – 4.30 | இடைவேளை |
| 4.30 – 5.45 | கலந்துரையாடல் |
| 5.45 – 6.00 | தொகுப்புரை |

கருத்துச் செறிவுடன் விவாதங்கள்
மேற்கொள்ளப்படவிருப்பதால், அதிகபட்சம்
25–30 பேர் கலந்து கொள்வது பொருத்தமாக
இருக்கும் என்று கருதுகிறோம்.

பங்குபற்ற விரும்புவோர் தொடர்புகொள்ளவும்:

தமிழ் தகவல் நடுவம்
Tamil Information Centre
Thamil House
720 Romford Road
London E12 6BT, (UK)
Tel: +44 (0) 181 514 6390
Fax: +44 (0) 181 514 0164



# தமிழ் தகவல் நடுவம்
லண்டன்

# தமிழரின் உலகம்: ஆய்வரங்கு

கலந்துரையாடலும்,
விவரணப் படங்கள் திரையிடலும்

**Thamil House
720 Romford Road
Manor Park, London E12**

[illegible].08.97, 26.10.97, 25.01.98 & 29.03.98

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழரின் உலகம்:
## உரையாடலை நோக்கி

தமிழர் தம் கலாசாரம் சம்பந்தமான கருத்துக்களை உலகுதழுவிய விஷயங்களோடு வைத்து ஆய்வு செய்ய வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். உலகச் சிந்தனைகளைப் பாதிக்கிற அனைத்தும் நம் வாழ்க்கையைப் பாதிக்கின்றன. நமது வாழ்வனுபவங்கள் கூட உலகின் கலாசார நிகழ்வுகளால் மாற்றங்களையடைகின்றன.

இத்தகைய சூழலில் கவனங்கொள்ளப்பட வேண்டிய பல பிரச்சினைகள் நம்முன் விரிந்து கிடக்கின்றன. ஆய்வறிவு ஒரு புறமும், அனுபவ அறிவு மறுபுறமும் தனித்தனியே விலகிக்கிடக்கின்றன.

இதைக் கவனங்கொண்டு கல்வித்துறைசார் ஆய்வாளர்களையும், பல்வேறு அரசியல் கலாசாரச் கருத்தரங்குகளில் அனுபவம் பெற்ற அறிஞர்களையும், அவர்தம் பரிந்துரைகளையும் ஒன்றிணைக்க வேண்டிய தேவை எழுகிறது.

இந்நோக்கை நடைமுறைப்படுத்த, தமிழ் தகவல் நடுவம் ஆய்வரங்குகளை ஏற்பாடு செய்யக் கருதுகிறது. அதற்கு அந்தந்தச் சிறப்புத் துறைகளில் அறிவு பெற்றோர் அழைக்கபடவுள்ளார்கள். முதல் ஆண்டுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என, 4 அரங்குகளை ஏற்பாடு செய்ய, தமிழ் தகவல் நடுவம் உத்தேசித்துள்ளது.

இக்கருத்துக்கள் தொடர்பான ஆய்வு ஆவணங்களான விவரணப்படங்களும் திரையிடப்பட்டு, அவற்றின்மீது அறிஞர்கள் கருத்தையொட்டி விவாதங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென நடுவம் கருதுகிறது.

www.tamilarangam.net



# வேர்கள்:
## கடந்த காலத்திலிருந்து எதிர்காலம் நோக்கி

நிகழ்காலத்தை ஆய்வு செய்வதற்கு நாம் கடந்தகாலத்தைப் பார்க்கிறபோது, எதிர்காலத்தைக் கவனங்கொண்டே பார்க்கிறோம்.

கடந்தகாலம்: படிப்பினைகள். நிகழ்காலம்: நெருக்கடிகள்.
எதிர்காலம்: படிப்பினைகள் + நெருக்கடிகள் = பரிந்துரைகள்.

பரிந்துரைகள் ஒரு பரிமாணம் கொண்டதா எனில், பல்வேறு மக்கள் தரப்பினரின் பல்வேறு பரிந்துணர்வுகளை எவ்வாறு ஒன்றிணைக்கப் போகிறோம்?

இனம், இனக்குழு, மானுடவியல் குறித்த ஆய்வுகளை அவ்வழியில் நாம் சமூகவியல், அரசியல், அறவியல் ஆய்வுகளோடு இணைக்க வேண்டும்.

இத்தகைய ஆய்வுகள் பிறகு தொழில்நுட்பம், கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றோடு உறவுபடுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

இவையே எமது அடையாளம், எமது வேர்கள், எமது இப்போதைய இடம், எமது எதிர்காலம் போன்றன பற்றிய பிரக்ஞையைக் கொண்டுவரும்.

24 ஓகஸ்ற் 1997, பிற்பகல் 2.00–6.00

# மதம், மொழி, கலாசாரம்

தேசியத்தின் தனித்தன்மை பற்றிப் பேசும்போது, உடனடியாகவே நாம் தனித்துவமான கலாசார வரையறை பற்றியும் சிந்தித்தாக வேண்டும்.

கலாசாரம் மக்களின் நடை, உடை, சடங்குகள், திருவிழாக்கள், மதம், மொழி, உறவுகள் போன்றவற்றால் ஆனது.

மதம், மொழி போன்றன பல்வேறு வேறுபட்டுள்ள தன்மைகளையும், வரலாற்றின் போக்குக்கு எதிரான எதிர்மறைத் தன்மைகளையும் கொண்டிருக்கின்றன.

கலாசாரத்தை மொழி, மதம், சடங்குகள் போன்றவற்றோடு மட்டும் வரையறைப்படுத்திக்கொள்ள முடியுமா? தேசியக் கலாசாரம் பிற கலாசார மதிப்பீடுகளோடு கொள்ளும்போது ஏற்படும் விளைவுகள் எவ்வாறானவை? அவை ஏற்கத்தக்கவையா ஆதிக்கத் தன்மை வாய்ந்தவையா?

இதில் காலனியம், நவகாலனியம், தொழிற்சங்கம் போன்றவற்றின் பங்கு என்ன?

இவையெல்லாம் கலாசாரத்தின் சாராம்சம் பற்றி யோசிக்கும் போது இடையில் நாம் சிந்திக்க வேண்டிய பிரச்சினைகள்.

26 ஒக்ரோபர் 1997, பிற்பகல் 2.00–6.00



www.tamilarangam.net



# காலனியம், பின் காலனியம்

எமது கலாசாரம், மொழி போன்றவை பற்றிச் சிந்திக்கும்போதே இதன்மீது படிந்திருக்கும் கடந்தகாலம் உடனடியாக நமது கவனத்துள் வருகிறது.

எமது கலாசாரம் என்பது என்ன? அதன் தனித்தன்மை அதன் தூய தரத்தில் தொடர்ந்து வருகிறதா? காலனியம் தோற்றுவித்த பாதிப்புகள், மாற்றங்கள் என்ன? அப்பாதிப்புகள் எம் கலாசாரத்தை கீழ்நோக்கி இழுத்துச் சென்றதா அல்லது வளர்ச்சி நிலைக்கு இட்டுச் சென்றதா?

இன்றும் எமது கல்வியமைப்புக்கள் தொழில்நுட்ப, வியாபார அக்கறைகள், நோக்குகள் போன்றவற்றை பின் காலனியம் தீர்மானிக்கிறதாக இருக்கிறது.

இவ்வகையில் எமது கலாசாரம் விருத்தி பெற்றதாக, தொடர்ந்து வருவதாக, உன்னதமானதாக சொல்லப்பட முடியுமா?

எது, எமது கலாசாரத்துக்குத் தடையாயிருக்கிறது? எதிலிருந்து நாம் விடுவித்துக்கொள்ள வேண்டும்?

இவை பற்றியெல்லாம் நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

25 ஜனவரி 1998, பிற்பகல் 2.00–6.00

# தேசியம்

தேசியம் என்கிற பிரச்சினை இன்று அரசியல், கலாசார விவாதங்களில் முக்கியம் பெறும் பிரச்சினை மட்டுமல்ல, கோடானு கோடி மக்களின் விடுதலைக்கான உடைமைப் பிரச்சினையாகவும் இருக்கிறது.

தேசியம் பற்றிய விவாதங்கள் காலனியாதிக்கத்தோடும், காலனியாதிக்கத்திற்கு பின்னைய விளைவுகளோடும் தவிர்க்கவியலா வகையில் பிணைக்கப்பட்டு இருக்கின்றன.

தேசியம் பற்றிய விவாதங்களுக்கு 500 ஆண்டுகால வரலாறு இருக்கிறது.

வட அயர்லாந்து, ருவாண்டா, ஈழம், காஷ்மீர் என தொடர்ந்து கொண்டிருக்கும் தேசியம் பற்றிய விவாதங்கள், வாதப்பிரதிவாதங்கள், அதன் திசைவழி போன்றவற்றிலெல்லாம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

தேசியத்துடன் இணைத்து, பிற பிரச்சினைகளையும் நாம் பார்த்தாக வேண்டியிருக்கிறது.

29 மார்ச் 1998, பிற்பகல் 2.00–6.00



www.tamilarangam.net

# Tamil Information Centre

Committed to Human Rights and Community Development

Thamil House
720 Romford Road
London E12 6BT,(UK)
**Telephone**: + 44 (0) 181 514 6390
**Fax**: + 44 (0) 181 514 0164
**E-Mail**: 101560.3704@COMPUSERVE.COM

எங்கள் குறிப்பு SH/01/97
திகதி 14-07-97.

அன்புடையீர்

<u>தமிழரின் உலகம்: ஆய்வரங்கு</u>

தமிழ் தகவல் நடுவம் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைப் பின்னணியாகக் கொண்டு பல அடிப்படைக் கருத்துகள் தொடர்பான ஆய்வரங்குகளை மேற்கொள்ளவுள்ளது. இக் கருத்துப் பரிமாறல்களின் வரிசையில் முதலாவது தலைப்பு 'வேர்கள்.' (Roots) என்பதாகும்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தோற்றுவாய்களை நாம் தெளிவாக வரையறுத்துக் கொள்வோமாயின் தீர்வுகள் பற்றிய இலக்கு இலகுவாக அமையும்.

எனவே 'தேசியம்' பற்றியும் அவை தொடர்பான பல அம்சங்களை ஆழமாகவும் விரிவாகவும் நாம் ஆராய்வதால் தெளிவான விழிப்புணர்வு ஏற்பட வழியேற்படும்.

மேற்குறிப்பிட்ட பரந்த நோக்கங்களை மனதிற் கொண்டு இவ் ஆய்வரங்கை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (திகதி 24-08-97) பிற்பகல் 2 மணியளவில் தமிழ் தகவல் நடுவத்தில் (TIC) நிகழ்த்த உத்தேசித்துள்ளோம்.

தாங்கள் தமிழ்பேசும் மக்கள் குறித்த பிரச்சனையிலும், பொதுவாகவும் ஆழ்ந்த அக்கறையும் அறிவும் உள்ளவர் என்பதை மனதிற் கொண்டே இவ் அழைப்பினை தங்களுக்கு அனுப்பியுள்ளோம்.

இவ் அரங்கில் தாங்கள் தவறாது தொடர்ச்சியாக பங்குபற்ற வேண்டும் என்பது எமது வேணவா.

இக் கலந்துரையாடலில் சுமார் 30 பேர் வரை கலந்து கொள்வர். இவ் உரையாடல் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நிகழும்.

எழுத்து மூலமான கருத்துக்கள் மிகவும் வரவேற்கப்படும்.

இணைக்கப்பட்டுள்ள விவாதக் குறிப்புகளின் அடிப்படையிலேயே கலந்துரையாடல் நிகழும். விவாதத் தலைப்புகளுக்கு ஏற்ற வகையில் விவரணத் திரைப்படங்கள் அவ்வப்போது காண்பிக்கப்படும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினைப் பூர்த்தி செய்து செலவுகளுக்கான தொகையாக £3.00 பவுண்டுகளுக்கான (ஆய்வரங்கு ஒன்றிற்கு) காசோலையையும் இணைத்து தாமதிக்காது அனுப்பி வைக்கவும்.

உங்கள் ஒத்துழைப்பையும் வரவையும் அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

வி.சிவலிங்கம்.
வி.சிவலிங்கம்
ஆய்வரங்கு திட்ட அமைப்பாளர்.

<u>Cheque payable to : Tamil Information Centre</u>

**Tamil Information Centre is a non-profit making company limited by guarantee. Registered in England No. 2563348**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

# விவாதக்குறிப்பு

## தலைப்பு - வேர்கள்

தேசிய இனப்பிரச்சனைகள் ஆழமான பின்னணியைக் கொண்டுள்ளவை. இப்பின்னணி பற்றிய விபரங்களை ஆராய்வதும் விவாதிப்பதும் அரசியல் ஆர்வலர்களுக்கு அவசியமானதாகும். அத்துடன் தீர்வு நோக்கி பார்வையைச் செலுத்துவதும் இலகுவானது.
தேசிய இனப்பிரச்சனை இன்று சர்வதேச மட்டத்தில் எவ்வாறு அணுகப்படுகிறது? எத்தகைய எடுகோள்கள் அல்லது ஆதாரங்கள் இதற்கான நியாயங்களாக பிரயோகிக்கப் படுகின்றன? என்பது பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியமாகும்.
எனவே எமது கருத்தரங்கினை வேர்கள் என்ற தலைப்பில் விவாதிக்கவுள்ளோம்.

### வேர்கள் **(Roots)**

1. இனத்தின் வளர்ச்சியின் பின்னணியைப் பற்றிய கருத்துரைகள் இவை இனக்குழுமம் (Ethnicity), தேசீயம் (Nationalism) தேசீயக் குணாம்சம் (National Character) தேசீய சுயநிர்ணய உரிமை (National Self determination) பிரிவினை (secessionism) என்பவற்றின் பொருள் விளக்கம், தோற்றுவாய், வளர்ச்சி.

2. மேற்குறிப்பிட்ட தோற்றுவாய்களுக்கு அல்லது காரணிகளுக்கு இயற்கை (Nature) பூகோள வரையறைகள் (Gepgraphical Boundaries), உயிர்க் கூற்றிய நிர்ணயம் ( Genetical determinism) வழக்காற்றியல் மரபுகள், சடங்குகள் (folk customs,myths) என்பன எவ்வாறான உந்துதலை வழங்குகின்றன? பற்றிய ஆய்வு.

3. இனம் இனக்குழுமம் என்பவற்றிற்கும் தேசீயத்துக்கும் இடையே நிலவும் உறவுகள் பிரச்சனைகள் பற்றியன. (The relation between ethnicity and national citizenship) இவற்றில் மொழி, மதம் போன்றவை வகிக்கும் பாத்திரங்கள். இனத்துக்கும் நிறத்துக்கும் உள்ள உறவு சம்பந்தமான கருத்தியல்.

4. மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் பின்னணியில் எமது (தமிழ் பேசும் மக்கள்) அடிப்படையான ஆதார அடையாளம் (Basical Identical Orientation) எத்தகையது?